செ. கு. எண்: 177 நாள் :06.12.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 6.12.2015

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை மற்றும் தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பெய்த கன மழையினால் 1.12.2015 அன்று சென்னை, எழும்பூர் வட்டம், சூளைமேடு பகுதியைச் சேர்ந்த திரு. மோகன் என்பவரின் மகன் பிரேம்குமார்;

2.12.2015 அன்று புரசைவாக்கம் வட்டம், நம்மாழ்வார்பேட்டையைச் சேர்ந்த திரு. சந்திரன் என்பவரின் மகன் மணிகண்டன்; வேளச்சேரி வட்டம், ஆதம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த திரு. சுப்பிரமணி என்பவரின் மகன் பாண்டியன்;

3.12.2015 அன்று எழும்பூர் பகுதியைச் சேர்ந்த திரு. காமேஷ் என்பவரின் மகள் ஹிரக்கா; அமைந்தகரை வட்டம், நடுவாங்கரை பகுதியைச் சேர்ந்த திரு. துளசிங்கம் என்பவரின் மகன் ரகுராம்;

4.12.2015 அன்று விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டம், தென்கரை கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமகிருஷ்ணன் என்பவரின் மனைவி கிருஷ்ணம்மாள்;

--- ஆகியோர் கன மழையின் காரணமாக வெள்ள நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

4.12.2015 அன்று திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், காசிதர்மம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுடலைமுத்து என்பவரின் மனைவி மாரியம்மாள் மழையின் காரணமாக மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டில் தற்போது பெய்து வரும் கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **7** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**